**கவனிக்க**.-*2023.11.17 ஆந் திகதிய 2359 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II, *பகுதி* III *மற்றும் பகுதி* IV*(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2360 - 2023 නොවැම්බර් මස 24 වැනි සිකුරාදා - 2023.11.24**

*2360 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III - காணிகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 514 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 516 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, அதாவது 2023, திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


513 - B 82517- 353 (2023/10)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கற் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்.

*மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மினுவங்கொடை பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் யு. டப்ளிவ். ரி. யு. ராஜகருணா ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1995.08.21 ஆந் திகதி, இல. கம்/பிர/மினு/300 என்ற இலக்கத்தை உடைய வழங்கற் பத்திரம் இல. 116, போதிபிஹிட்டுவலை, ஹொரம்பெல்லை என்ற முவரியில் வசித்து வந்த ஹொரத்தல் பேடிகே ஞானவத்தி என்பவருக்கு வழங்கப்பட்டு கம்பஹா மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இல. எல். டி. ஓ. 30/14 இன் கீழ் 1995.08.23 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட கீழே உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு உரிமை கோருவதற்கு சட்டப்படியான பின் உரித்தாளி ஒருவர் இல்லாமையால் அல்லது பின் உரித்தாளி ஒருவர் இருந்தும் அவர் உரிமை கோர விரும்பாமையால், இக்காணிக்கு உரிமை கோர பின் உரித்தாளி ஒருவர் இல்லை எனக் கருதி மேற்படி காணியின் வழங்கற் பத்திரத்தை காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதை இத்தால் அனைவருக்கும் அறியத்தருகிறேன். மேலும் இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புகள் இருப்பின் அவற்றை 2023.12.15 ஆந் திகதிக்கு முன்பு எனக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் வேண்டும்.*

**உப அட்டவணை**

*மேல் மாகாணம் கம்பஹா நிருவாக மாவட்ட, மினுவங்கொடை பிரதேச செயலக பிரிவில் தாசியபத்துவ, 105/5, போதிபிஹிட்டுவலை (ஹொரம்பெல்லை) என்ற ஊரில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இல. 59/05/3 என்ற களப்பத்திரத்தில் மு. பி. கம். 2249 என்ற காணித் துண்டாக்கல் பிரித்தெடுப்பில் இல. 13 எனக் குறிக்கப்பட்டுள்ள 0.0396 ஹெக்டயார் பரப்பளவைக் கொண்ட கந்தகெலாவத்தை என்ற அரச காணி.*

*வடக்கு : கம், 410 ஆரம்ப பிரித்தெடுப்பில் இல. 12 மற்றும் 13 காணித்துண்டுகள்;*
*கிழக்கு : கம், 410 ஆரம்ப பிரித்தெடுப்பில் இல. 13 மற்றும் கொ 1657 ஆரம்ப பிரித்தெடுப்பில் இல .......... காணித்துண்டுகள்;*
*தெற்கு : கொ. 1657 ஆரம்ப பிரித்தெடுப்பில் இல. 01 காணித்துண்டு;*
*மேற்கு : கம். 410 ஆரம்ப பிரித்தெடுப்பில் இல. 16 காணித்துண்டு.*

*யு. டப்ளிவ். ரி. யு. ராஜகருணா,*
*பிரதேச செயலாளர்,*
*மினுவங்கொடை.*

*2023, ஒகத்து 23.*

*11 - 471*

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

## காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டம் 19 (4) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட மாணியப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (பிரிவு 104) சம்பந்தமான அறிவித்தல்.

*வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வாரியப்பொல பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளர் பீ. எம். எஸ். பிரியங்கனி பத்திராஜ எனும் நான் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் துணைப்பிரிவின் 19 (4) இன் கீழ் அதி மேதகு சனாதிபதியினால் 1995.12.11 ஆம் திகதி அன்று மினுவாங்கெட்டே, மினுவாங்கெட்டேயில் வசிக்கும் மஹீப்பால முதியான்சேலாகே சிறில் பாரிஸ் என்பவருக்கு வழங்கப்பட்ட K/P52662 குருநாகல் மாவட்டம் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணி 1997.07.30 ஆம்*

திகதி அன்று பதிவாளர் அலுவலகத்தில் இல்ககம் D34/7634/97 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது அதில் எவரும் இல்லாத காரணத்தால் வாரிசு இல்லாததாக அறிவிக்கப்பட்டுள்ளது. வாரிசாக இருக்க சட்டபூர்வமாக தகுதி உடையவர் அல்லது தகுதி உள்ள ஒருவர் இருந்தால் அவருக்கு வாரிசாக அவர் விரும்பவில்லை என்றால் அச்சட்டத்தின் 104 வது பிரிவின் கீழ் மேற்படி சலுகைக் கடிதம் இரத்துச் செய்யப்படுகிறது என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அவற்றை 2023.12.15 ஆந் திகதிக்கு முன்பு எழுத்துபூர்வமாக எனக்கு அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

குருநாகல் நிருவாக மாவட்டத்தின் வாரியப்பொல பிரதேச செயலகப் பிரிவில் தேவமெத்தே கோரள 1253 - மினுவாங்கெட்டே கிராம அலுவலர் பிரிவு மினுவாங்கெட்டே எனும் கிராமத்தில் நிள அளவை நாயகம் பொறுப்பில் உள்ள மற்றும் நிள அளவை நாயகத்தினால் தொகுக்கப்பட்ட இல. 04 இன் கள ஆய்வு பட்டியல் மூலம் அ. க. பி. 2488 இன் படி தயாரிக்கப்பட்ட மற்றும் ஹெக்டெயர் - 0.799, ரூட் - 00, பர்ச்சஸ் 00 கீழே காட்டப்பட்டுள்ளபடி அரசாங்க காணி எல்லைகள் - மினுவாங்கெட்டேஹேன.

வடக்கு : காணித்துண்டு இல. 468, 473;
கிழக்கு : காணித்துண்டு இல. 504, 503;
தெற்கு : காணித்துண்டு இல. 466;
மேற்கு : காணித்துண்டு இல. 468, 469.

பீ. எம். எஸ். பிரியங்கனி பத்திராஜ,
பிரதேச செயலாளர்,
வாரியபொல,
பதவி முத்திரை.

2023, யூலை 05.

11 - 472

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) வது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்பு பத்திரத்தினை இரத்துச் செய்தல் - (104 ஆம் பிரிவின்) கீழான அறிவித்தல்

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தின் ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் ஈ. ஏ. டி. எம். அத்துகோரள ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) வது உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதியினால் 12.12.1996 ஆம் திகதி வழங்கப்பட்ட இலக்கம் புத்/ ஆர/ பிர 52595 எனும் இலக்கத்தை கொண்ட அழிப்பு பத்திரமானது உரிமையாளரான பங்கதெனிய, வீரகுமந்தலுவ எனும் இடத்தில் வசிக்கும் ரணதுங்க ஜயசேகர கோரலலாகே மர்தினஹாமிக்கு வழங்கப்பட்டு, சிலாபம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் ஆர 29/21 இன் கீழ் 1997.11.20 ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள, காணிக்கு பின்னுருத்தாளியாவதற்கு விருப்பமின்மை காரணமாக பின்னுரித்தாளர் ஒருவரை நியமிப்பதற்கு எவரும் இல்லாது இருப்பதால் அந்த அளிப்புப் பத்திரத்தை மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்பதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2023.12.15 ஆந் திகதிக்கு முன்பதாக எனக்கு தெரியப்படுத்த வேண்டும்.

**அட்டவணை**

வடமேல் மாகாணத்தின் புத்தளம் நிர்வாக மாவட்டத்தின் ஆரச்சிகட்டுவ பிரதேச செயலகப் பிரிவின் ஆனவிளுந்தாவ பற்றுவின் வீரகுமந்தளுவ கிராம அலுவலர் பிரிவில், வீரகுமந்தளுவ எனும் ஊரில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டதுமான இலக்கம் 666 ஆம் காணித்துண்டாடல் இரேகை வரைபடத்தின் 73 ஆம் இலக்க காணித்துண்டாக காட்டப்படுவதுமான 02 ஏக்கர் விசாலம் கொண்டதுமான பின்வரும் எல்லைகளை உடைய காணி அரச காணியாகும்.

வடக்கு : பாதை;
கிழக்கு : வெரோனிகா உடைய இடம்;
தெற்கு : பாதை;
மேற்கு : ஜோசப் உடைய இடம்.

ஈ. ஏ. டி. எம். அத்துகோரள,
பிரதேச செயலாளர்,
ஆரச்சிகட்டுவ,
பதவி முத்திரை.

*2023, நவெம்பர், 21.*

*11 - 619*

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/74470.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: UPLC/L/26/KG/L/190.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மொனராகல மாவட்டம், கதிர்காமம் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 146D, கதிர்காமம் கிராம உத்தியோத்தர் பிரிவின் காமினிபுர கிராமத்தின் அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. கே. எச். சீ. கௌசல்ய என்பவர் மூலம் வரையப்பட்ட நிலவரைபட இல. 2021/36 இனையுடைய காணித் துண்டு இலக்கம் A இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 34.7 பேர்ச், 02 ஏக்கர் அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு கலுகை அடிப்படையில் திரு. எதிரிசூரிய பட்டபத்தகே நிசல் கித்மல் என்னும் நபர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறியத்தரபப்படுகிறது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : மின்சார வேலி ஒதுக்கம்:
கிழக்கு : D. G. சானக அமில ரங்கன என்பவர் அனுபவிக்கும் காணி;
தெற்கு : கால்வாய் ஒதுக்கம்;
மேற்கு : துஷாரி பிரியதர்சினி என்பவர் அனுபவிக்கும் காணி.

03. கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (10.02.2023 ஆம் திகதியிலிருந்து 09.02.2053 ஆம் திகதி வரை)

(ஆ) **வருடாந்நக் குத்தகை**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.02.10 ஆம் தினத்திலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்கும் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகையானது தொடர்ச்சியாகச் செலுத்தப்படாத விடத்து செலுத்தப்படாத மிகுதித் தொகைக்காக 10% தண்டப் பணமானது விதிக்கப்படும்;

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுசானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, ஒற்றோபர், 24.

11 - 467

---

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/64034.
மாகாண காணி ஆணையாளாரின் இல: பலாத்/இகொ/இ9/கொபே/தீ. ப.07.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கொபேகன பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல - 1321, ஹதலவ கிராம அலுவலர் பிரிவில் பட்டியதளுவ எனும் கிராமத்தில் எப். வி. பி. 1552 ஆம் இலக்க வரைபடத்தில் 182 ஆம் இலக்க காணித்துண்டின் ஒரு பகுதியாக குடியேற்ற அலுவலர் வரைந்த சுவடு வரைபடத்தில் "A" எனக் காட்டப்பட்டுள்ள 04 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை குடிநீர் திட்டத்திற்காக குத்தகைக்குத் தறுமாறு கேட்டு பிரஜா சக்தி பிரஜா முல சங்விதான நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு:

வடக்கு : எப். வி. பி. 1552 இன் 182 ஆம் இலக்க காணித்துண்டின் ஒரு பகுதி மற்றும் தெதுறு ஓய ஒதுக்கு;
கிழக்கு : உள்ளிடும் பாதை (நிர்மாணிக்க முன்மொழியப்பட்ட);
தெற்கு : எப். வி. பி. 1552 இன் 182 ஆம் இலக்க காணித்துண்டின் ஒரு பகுதி;
மேற்கு : எப்.வி.பி. 1552 இன் 182 ஆம் இலக்க காணித்துண்டின் ஒரு பகுதி.

03. குறித்தகாணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** : ஐந்து (5) வருடங்கள் (21.01.2022ஆம் தொடக்கம் 05 வருடங்கள் முன்னோக்கி)

**வருடாந்தக் குத்தகை**: பிரதான விலை மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2022 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 1/2% வருடாந்தக் குத்தகையாக கொடுபடல் வேண்டும்.

**தவணைப்பணம்** : அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரினால் இக்காணி பொதுக்கிணறு மற்றும் பம்பி அறை அமைக்கும் நோக்கத்திற்கு மட்டுமே உபயோகிக்க வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.01.21 ஆம் தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் மட்டும் அனுமதிக்கப்படும்;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்கு தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

எம். எச்.ஏ.டி. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, ஒற்றோபர், 20.

11 - 468

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/68871.
மாகாணக் காணி ஆணையாளாரின் இலக்கம்: NWP/PLC/L9/MD/LTL/03.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், மாதம்பை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 546 ஏ, மெத்தகம கிராம உத்தியோகத்தர் பிரிவினைச் சேர்ந்த மெத்தகம கிராமத்தில் அமையப்பெற்றிருக்கும் அ. நி. பு. 5297 இன் துண்டு இலக்கம் 02 இன் ஒரு பகுதியின் பொருட்டு கச்சேரி நில அளவையாளர் ஐ. பீ. குமாரகே அவர்களின் மூலம் அளவிடப்பட்டு தயார்படுத்தப்பட்ட நில வரைபட இலக்கம் 2019/46 இன் துண்டு இலக்கம் “A” இன் 0.0605 ஹெக்டயர் அளவுடைய அரச காணித் துண்டினை கூட்டுறவு கோப்சிட்டி விற்பனை நிலையம் ஒன்றினை கொண்டு நடாத்துவதற்கு வரையறுக்கப்பட்ட மாதம்பை பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தினரால் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. கோரியிருக்கும் காணியின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : அ. நி. ஏ. 1551 இன் துண்டு இலக்கம் 230 மற்றும் அ. நி. பு 5297 இன் துண்டு இலக்கம் 01:
கிழக்கு : அ. நி. ஏ. 1551 இன் துண்டு இலக்கம் 230 மற்றும் 2019/46 இன் துண்டு இலக்கம் பீ;
தெற்கு : 2019/46 இன் துண்டு இலக்கம் பீ மற்றும் அ. நி. ஏ. 1551 இன் துண்டு இலக்கம் 219;
மேற்கு : அ. நி. ஏ. 5297 இன் துண்டு இலக்கம் 01 மற்றும் அ. நி. ஏ. 1551 இன் துண்டு இலக்கம் 219.

கோரிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன் பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம் :** முப்பது (30) வருடங்கள் (30.06.2022 ஆந் தினத்திலிருந்து 30 வருடங்கள்)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்:** 2022 ஆம் வருடத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 2% ஆகும்.

**தவணைக் கட்டணம் .-** அறவிடப்பட மாட்டாது.

(இ) இக்காணி மாதம்பை வரையறுக்கப்பட்ட பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினரால் கூட்டுறவு கோப்சிட்டி விற்பனை நிலையத்தினை கொண்டு நடாத்துவது தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்பத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகைக்காரர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 30.06.2022 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ச்சியாகச் செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்;

ஒ) குத்தகைப் பணத்தினைத் தொடர்ச்சியாக செலுத்தாத சந்தர்ப்பத்தில் மீதமாகக் காணப்படும் நிலுவைப் பணத்தின் பொருட்டு 10% தண்டப் பணம் அறவிடப் படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு விடப்படும்.

எம். எச். ஏ. டீ. மதுஸானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
''மிஹிகத மெதுர'',
காணப் பிரதானச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, ஒற்றோபர், 24.

11 - 469

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/67565.
மாகாணக் காணி ஆணையாளர் இலக்கம்.: NWP/PLC/L9/NWG/LTL/09.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், நவகந்தேகம பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 645/1, இங்கினிமிட்டிய கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவினைக் சேர்ந்த இங்கினிமிட்டிய கிராம இலக்கம் PU/NWG/2016/522 கொண்ட நில வரைபடத்தின் துண்டு இலக்கம் 'A' இன் 2.0234 ஹெக்டயர் அளவுடைய அரச காணித் துண்டினை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆணமடுவ, சிபாரிசு செய்த முறைமையின் கீழ் இங்கினிமிட்டிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை அமைப்பதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : அரச காணி (நீர்ப்பாசன திணைக்களம் அனுபவிக்கின்ற):
கிழக்கு : குரு வெலயாய பற்றைக் காடு;
தெற்கு : கொன்கடவலவிலிருந்து இங்கினிமிட்டிய ஆற்றுக்கு செல்லும் பாதை;
மேற்கு : கடவல முக்கலான கீழ் காடு மற்றும் அரச காடு.

03. கோரிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன்பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2022.06.30 ஆம் திகதியிலிருந்து 30 வருடங்கள்)

(ஆ) **வருடாந்நக் குத்தகைப் பணம்**.- 2022 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவானதாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிபபீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2022 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் மாறுபடாத பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வொரு 05 வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரர் இந்தக் காணியினை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆணமடுவ, சிபாரிசு செய்த முறைமையின் கீழ் இங்கினிமிட்டிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை அமைப்பது தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(உ) பிரதேச செயலாளர், மற்றும் இச்செயற்திட்டத்துடன் தொர்புடைய ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப் பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும், நிர்மணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2022.06.30 ஆம் தினத்திலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ச்சியாகச் செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

(ஔ) குத்தகைப் பணத்தினைத் தொடர்ச்சியாக செலுத்தாத சந்தர்ப்பத்தில் மீதமாகக் காணப்படும் நிலுவைப் பணத்தின் பொருட்டு10% தண்டப் பணம் அறவிடப்படும்;

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைக் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு விடப்படும்.

எம். எச். ஏ. டீ. மதுஸானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணி பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, ஒற்றோபர், 24.

11 - 470

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/67563.
மாகாணக் காணி ஆணையாளாரின் இலக்கம்: NWP/PLC/L9/CH/LTL/04.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், சிலாபம் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 556 மெரவெல கிராம உத்தியோகத்தர் பிரிவினைச் சேர்ந்த மெரவெல கிராமத்தில் அரச நில அளவையியலாளர் மூலம் அளவிடப்பட்டு தயார்படுத்தப்பட்ட நில வரைபட இலக்கம் 2019/20 இன் துண்டு இலக்கம் ‘A’ இன் 20 பேர்ச் (0.0506 ஹெக்டயர்) அளவுடைய அரச காணித் துண்டினை வங்கி அலுவலகம் மற்றும் கேட்போர்ர்கூடம் ஒன்றினை அமைப்பதற்கு வரையறுக்கப்பட்ட மெரவெல ஷாந்த ஜோசப் கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தினரால் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : அ. நி. பு. 2731 இன் துண்டு இலக்கம் 24 இன் மிகுமிப் பகுதி மற்றும் அ. நி. பு. 2731 இன் துண்டு இலக்கம் 23 இன் மிகுதிப் பகுதி:

கிழக்கு : பீ. டீ. ஆர். கெனியூட்டருக்குச் சொந்தமான தென்னங்காணி;

தெற்கு : இலங்கை கிறிஸ்தவர் கோயிலுக்குச் சொந்தமான தென்னங்காணி;

மேற்கு : அ. நி. பு 2731 இன் துண்டு இலக்கம் 26 இன் மிகுதிப் பகுதி.

கோரிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன்பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம் :** முப்பது (30) வருடங்கள் (2022.08.17 ஆம் ஆம் தினத்திலிருந்து 30 வருடஙகள்)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்:** 2022 ஆம் வருடத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 2% ஆகும்.

**தவணைக் கட்டணம் :** அறவிடப்பட மாட்டாது.

(இ) இக்காணி மெரவெல வரையறுக்கட்ட ஷாந்த ஜோசப் தொழிற்சங்கத்தினருக்கு வங்கி அலுவலகம் மற்றும் கேட்போர் கூடம் ஒன்றை அமைப்பது தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மானிக்கப்பட்டிருக்கும்/ நிர்மானிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகைக்காரர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2022.08.17 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ச்சியாகச் செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும்

பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்;

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு விடப்படும்.

எம். எச். ஏ. டீ. மதுஸானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ராஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, ஒற்றோபர், 24.

11 - 475

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/74078.
காணி ஆணையாளரின் இல.: අම්/ඉකො/ඉ/අම්/වා/ප්‍රා.ලේ/08.

## காணி பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாறை மாவட்டம் அம்பாறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட W/86/H அம்பமல்தலாவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அம்பமல்தலாவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள அதிகாரம் பெற்ற நில அளவையாளரால் வரையப்பட்ட சுவட்டு வரைபடத்தில் வரைபட இலக்கம் 548 துண்டு இலக்கம் X மூலம் காட்டப்பட்ட சுமார் 0.2935 ஐ ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக திரு. பொரகார முதியன்சேலாகே சஞ்சய சுபுன் பண்டார எனும் பெயரில் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : ஈ. எம். குணதாசவின் காணி மற்றும் வீதிக்கான ஒதுக்கம்:
கிழக்கு : வீதிக்கான ஒதுக்கம் மற்றும் பீ. ஏ. மனோஜின் காணி மறறும் ஆர். பீ. பிரேமரத்னவின் காணி;
தெற்கு : ஆர். பீ. பிரேமரத்னவின் காணி மற்றும் கழிவு வாய்கால் ஒதுக்கம்;
மேற்கு : ஈ. எம். குணதாசவின் காணி.

குறித்த காணி கோரப்பட்ட தேவைக்கு குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது வருடங்கள் (30) (2023.10.24 ஆம் திகதி தொட்க்கம் 30 வருடங்கள் முன்னோக்கி)

**வருடாந்தக் குத்தகை**.- 2023 ஆம் வருடத்திற்கான காணியின் விலைமதிப்பீடு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2% ஆகும். 2023 ஆம் வருடத்திற்கான காணியின் விலை மதிப்பீடு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த ஆண்டில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% ஆகும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப்பணம் முடிந்து ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% கூட்டி வருடாந்த குத்தகையாக செலுத்தப்பட வேண்டும்.

**தவணைப் பணம்** :- அறவிடப்படமாட்டாது;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட (01) காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக் காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.10.24 திகதியிலிருந்து 05 வருடங்களாகிலும் முடியும் வரை காணி கீழ்க்குத்தகைக்கு அல்லது உரிமை மாறலுக்கு அனுமதிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும் அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் கோரிக்கையின்படி இக் குத்தகை வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டி. இஷாரா எம். சமரதுங்க
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 16.

11 - 548

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/73771.
மாகாணக் காணி ஆணையாளரின் இல.: EP/28/LB/L-10/15/AMP/POT/18.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொத்துவில் 18 கிராம அலுவலர் பிரிவில் பொத்துவில் (அறுகம்பை) கிராமத்தில் அரச அங்கீகாரம் அளிக்கப்பட்ட நில அளவையாளரால் வரையப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 காட்டப்பட்டுள்ள பர்ச்சஸ் 13.5 விஸ்தீரமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டுத் கங்கொடவிலகே இந்திக சுஜித் பெரேரா என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : கலக்சி கொட்டல்;
கிழக்கு : கடல் ஒதுக்கீடு;
தெற்கு : வீதி (பி. எஸ்);
மேற்கு : சின்ன உல்லை, பூந்தேட்டம்.

குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.10.10 தொடக்கம் முன்னோக்கி)

**வருடாந்நக்குத்தகை**.- 2023 ஆம் வருடத்தில் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா. 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப்பெறுமதியின் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2023 ஆம் வருடத்தில் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா. 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தரப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும் ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிநத ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்த்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(உ) பிரதேசச் செயவாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.10.10 திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையினும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்பட்ட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காககொடுபடல் வேண்டும் அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்கும் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டி. இஷாரா எம். சமரதுங்க
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 15.

11 - 598

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/75352.
மாகாணக் காணி ஆணையாளர் இலக்கம்.: NWP/PLC/L9/GL/LTL/70.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டம், கல்கமுவ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 54, இஹலபமுகந்தேவ கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த இஹலபமுகந்தேவ கிராமத்தின் அரச நில அளவையியலாளர் மூலம் வரையப்பட்ட இலக்கம் 2022/23 மற்றும் 2022.09.19 ஆந் திகதிய நில வரைபடத்தின் காணித் துண்டு இலக்கம் A இன் 0.1517 ஹெக்டயர் அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு யாகூப் லெப்பே முஹம்மது நிசவுஸ் என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

- வடக்கு : எப். வி. பி. 3237 இன் காணித் துண்டு இல. 126 மற்றும் 124 1/2;
- கிழக்கு : எப். வி. பி. 3237 இன் காணித் துண்டு இல.124 2/2 மற்றும் 124 1/2;
- தெற்கு : எப். வி. பி. 3237 இன் காணித் துண்டு இல. 124 1/2;
- மேற்கு : எப். வி. பி. 3237 இன் காணித் துண்டு இல. 124 1/2 மற்றும் 126.

03. கோரிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன்பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2022.08.02 ஆம் திகதியிலிருந்து 30 வருடங்கள்)

(ஆ) **வருடாந்தக் குத்தகைப் பணம்**.- 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவானதாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வொரு 05 வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்கணியினை வாணிப நடவடிக்கைகள் (எரிபொருள் நிரப்பு நிலையம்) தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர், பிரதேச செயலாளரின் மனங் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) காணி ஆணையாளர் (வடமேல் மாகாணம்) பிரதேச செயலாளர், செயற்றிட்டத்தோடு தொடர்புடைய நிறுவனம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மணிக்கப்படவிருக்கும் கட்டங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) குத்தகை ஆரம்பிக்கும் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் காணியினைப் பெற்றுக்

கொண்ட நோக்கினை நிறைவேற்றுவதன் பொருட்டான துணைக் குத்தகைகள் அல்லது கைமாற்றங்கள் தவிர்ந்த, வேறு துணைக் குத்தகைகளோ அல்லது கைமாற்றங்களோ செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ச்சியாகச் செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகைப் பணத்தினைத் தொடர்சசியாகச் செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகைப் பணத்தினைத் தொடர்ச்சியாகச் செலுத்தாதவிடத்து செத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையின் பொருட்டு10% தண்டப் பணமும் அறவிடப்படும்;

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு விடப்படும்.

எம். எச். ஏ. டீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, ஒற்றோபர், 03.

11 - 628

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/75456.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NP/28/04/02/SLO/42/1331.

## அரசாங்க நில ஒழுங்கு விதிமுறைகள் 21 (2) ன் கீழ் கொடுக்கப்படும் அறிவித்தல்

மன்னார் மாவட்டம், மன்தாய் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு பாலியாறு (MN/03) கிராம அலுவலர் பிரிவின் முன்றாம்பிட்டி கிராம குடியேற்ற அதிகாரி அவர்களால் வரையப்பட்ட மற்றும் பிரதேச செயலாளரால் ஒப்பமிடப்பட்ட துணை வரைபின் படியான 05 ஏக்கர் பிரமான அரச காணி துண்டு ஒன்றை மத நடவடிக்கைகளுக்காக சித்திவிநாயகர் கோவில் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையினால் குத்தகைக்காக வேண்டப்பட்டுள்ளதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : அரச காணி:
கிழக்கு : அரச காணீ;
தெற்கு : வீதி;
மேற்கு : A 32 வீதி.

03. விண்ணப்பிக்கப்பட்டுள்ள நிலத்தை தேவைப்பட்ட விடயத்திற்காக குத்தகைக்ககுக் கொடுக்க முடியும். எனவே அரசாங்கத்தின் நிலையான ஏனைய நிபந்தனைகளுக்கும் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டு குறித்த காணியை குத்தகைக்குக் கொடுக்க அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (06.10.2023 முதல் 05.10.2053 வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்** .- தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் படி 2023 ஆம் ஆண்டில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் அரைசாகி (1/2%).

(இ) குத்தகை பெற்றுக் கொள்ளப்படுபவர்களால் இக்காணி சித்திவிநாயகர் கோவிலின் அபிவிருத்திக்குஅல்லாமல் வேறு விடயங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது;

(ஈ) குத்தகை பெற்றுக் கொள்ளப் படுபவர்களால் குத்தகை ஆரம்பமாகும் தினத்திலிருந்து ஒரு (01) வருடத்திற்குள் பிரதேச செயலாளரின் மனதைக் கவரும் வகையில் இக்காணி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய அலுவலகங்களால் விதிக்கப்பட்டிருக்கும் விசேட நிபந்தனைகளுக்கும் இக்குகுத்தகை உட்படல் வேண்டும்;

(ஊ) நிறுவியுள்ள/ நிருவப்பட்டுள்ள கட்டிடங்கள் உரிய நிலையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு கொடுக்கப்பட்ட காலத்தினுள் காணியை குத்தகைக்கு எடுத்த நோக்கத்தை குறித்த கால எல்லைக்குள் அடைந்துகொள்ள தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவிக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 06.10.2023 ஆம் திகதி முதல் 05 வருடங்கள் செல்லும் வரை இக்கணியை குத்தகைக்கு எடுத்த காரணத்திற்காக உள் குத்தகைக்கு கொடுப்பது அல்லது சாற்றுதல் தவிர வேறு காரணத்திற்காக உள் குத்தகைக்கு கொடுப்பது அல்லது சாற்றுதல் அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப் பணம் தொடர்ந்து செலுத்தப்பட வேண்டிய துடன் அவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை உடன்படிக்கை தானே செல்லுபடியற்றதாகி விடும்.

குத்தகைப் பணம் தொடர்ந்து செலுத்தத் தவறும் சந்தர்ப்பங்களால் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைப் பணத்திற்காக 10% தண்டனை வட்டி அறவிடப்படும்.

(ஓ) கீழே குறிப்பிடப்படும் தொல்லியல் நிபந்தனைகளுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

I. இப்பரிந்துரை செல்லுபடியாவது பிரதேச செயலாளரால் மேல் ஒப்பமிடப்பட்ட தடமறிதலிலே காட்டப்பட்டுள்ள எல்லைகளுள் உள்ள 05 ஏக்கர் நிலப்பரப்புக்கு மாத்திர மாகும்.

II. கட்டிடங்களுக்காக நிலத்தை அகழ்வு செய்யும் போது வலயத்திற்குப் பொறுப்பான தொல்பொருள் உத்தியோகத்தர்கள் மற்றும் வலயத்திற்குப் பொறுப்பான கிராம அலுவலர்களுடைய மேற்பார்வையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

III. நிலத்தை அகழ்வு செய்யும் போது தொல்லியல் சம்பந்தப்பட்ட காரணிகள் அல்லது குறிகள் அல்லது அது சம்பந்தப்பட்ட சான்றுகள் என சந்தேகிக்கக் கூடிய ஏதும் கிடைக்கப் பெற்றால் உரிய வேலையை உடனே நிறுத்தி விட்டு தொல்லியல் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டும் (தொ. பே. 024 - 2224805)

IV. என்னிடம் கேட்டுக்கொள்ளப்பட்ட பிரகாரம் உரிய நிலத்தின் மேல் உள்ள தொல்லியல் காரணிகளை மாத்திரம் கருத்தில்கொண்டு இவ்வனுமதியைப் பெற்றுத்தருவதால் இது தொடர்பான செயல்பாடுகளை மேற்கொள்ளும்போது மக்கள் எதிர்ப்பு ஏற்படின் அது சம்பந்தமாக தொல்லியல் திணைக்களமோ அல்லது அத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்களோ அதற்கு பொறுப்பு எடுக்க மாட்டார்கள்.

இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட தினத்திலிருந்து 06 கிழமைகளுக்குள் உரிய காணியை அவ்வாறு குத்தகக்குக் கொடுக்கப்படக்கூடாது என்பதற்கான ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்களை எனக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படாவிட்டால், வேண்டுகோளுக்கு ஏற்ப குத்தகை வழங்கப்படும்.

கே. ஜி. பீ. சௌம்யா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர், 13.

11 -630

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.